# கோறளைப்பற்று பிரதேச சபை

## 58வது சபை அமர்வு (01.12.2022)

## கூட்டறிக்கை

**காலம்:** 01.12.2022 – வியாழக் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 58ஆவது சபை அமர்வு, 01.12.2022 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

| | |
|---|---|
| 01. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | ~ கௌரவ தவிசாளர் |
| 02. திரு. தர்மலிங்கம் யசோதரன் | ~ கௌரவ உப தவிசாளர் |
| 03. ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 04. திரு. சிற்றம்பலம் கிருபாகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 05. திரு. காளிக்குட்டி நடராசா | ~ கௌரவ உறுப்பினர் |
| 06. ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் | ~ கௌரவ உறுப்பினர் |
| 07. ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | ~ கௌரவ உறுப்பினர் |
| 08. திரு. கனகரெட்ணம் கமலநேசன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 09. திரு. பொன்னையா புஸ்பேந்திரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 10. திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் | ~ கௌரவ உறுப்பினர |
| 11. ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 12. திரு. கதிரவேலு நல்லரெட்ணம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 13. திரு. குணராசா குணசேகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 14. திரு.கந்தசாமி பகீரதன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 15. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 16. திரு. சாமித்தம்பி மணிசேகர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 17. திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 18. திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ~ கௌரவ உறுப்பினர் |
| 19. திருமதி. பொன்னையா கலைவாணி | ~ கௌரவ உறுப்பினர |
| 20. ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | ~ கௌரவ உறுப்பினர் |
| 21. திரு. சுந்தரம் சுதர்சன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 22. ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 23. திரு. சண்முகம் கதிரவன் | ~ கௌரவ உறுப்பினர் |

58ஆவது சபை அமர்வானது கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களின் தலைமையில் சபா மண்டபத்தில் 01.12.2022 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன், மண்முனை தென் எருவில் பற்று தவிசாளார் யோகநாதன் ஐயா அவர்கள் இறைபதம் அடைந்ததனால் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ஒரு இரண்டு நிமிட மௌன இறைவணக்கமும் இடம் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து 58 ஆவது சபை அமர்விற்கு வருகை தந்த , கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், மற்றும் செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது .

எமது சபையின் நடைமுறை நிலைப்பாடுகளாக அண்மையில் உலக வங்கியினருடைய மேற்பார்வையில் இணைந்த வகையில் பிரதம செயலாளரும் திடிரென வருகை தந்ததாகவும் ஆளுனர் அவர்களும் சபை நடவடிக்கையினை பார்வையிட வந்தாகவும் அத்துடன் சபையின் வருமானம் குறவைடைந்து செல்வதுடன் செலவுகள் அதிகரித்துச் செல்வதாகவும் அத்துடன் எரிபொருளுக்கான செலவுகள் அதிகமாகக்காணப்படுவதாகவும் தெரிவித்ததுடன், வருட இறுதி நாள் என்பதனால் கணக்கறிகை கௌரவ உறுப்பினர்களுக்குத் தரப்படவில்லை என்பதுடன் இரண்டு வருடங்களுக்கு மேலாக பெற்றுக்கொள்ளப்படாத முத்திரை வரியினை மீளளித்தல் தொடர்பான கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மீளளிப்பினை பெற்றுக்கொள்ளவதற்கான தீர்மானம் சபையினால் எடுக்கப்பட வேண்டும் எனவும் மாற்றுத்திறனாளிகளுக்கான வாரம் கொண்டாடப்படவுள்ளதனால், அதற்கான நிதிப் உதவியினை வழங்குமாறு கடதம் மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும், அவ் விடயத்திற்கும் அனுமதி வழங்க வேண்டியுள்ளது எனவும் அத்துடன் தீர்மானங்களை நிறைவேற்ற முன்பதாக கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் அவர்கள் பிரேரணை ஒன்றினை முன்வைத்துள்ளதாகவும் இப் பிரேரணை தொடர்பான தகவல்களை அவர் தெளிவு படுத்துவார் எனவும் குறிப்பாக கோறளைப்பற்று தெற்கு கோறளைப்பற்று , கோறளைப்பற்று மத்திக்குரிய எல்லை நிர்ணயங்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டும் இதுவரை வர்தமானியில் பிரசுரிக்க வில்லை எனவும் வர்தமானியில் பிரசுரிப்பதற்கான தீர்மான அறிவிப்பது தொடர்பான பிரேரணையாக அமையும் எனவும் இது தொடர்பான கருத்தினை தெளிவு படுத்துமாறு கௌரவ உறுப்பிரை கேட்டுக்கொண்டு கடந்தமாத கூட்டக்குறிப்பினை உறுதிப்படுத்தித் தருமாறும் தெரிவித்துக் கொண்டு தனது தலமையுரையினை நிறைவு செய்தார் .

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌர உறுப்பினர் ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் அவர்கள் சிறுபான்மை இனங்கள் பாரிய பிரச்சினைகளை நாளாந்தம் எதிர்கொள்வதாகவும் மக்கள் பிரததிநிதி என்ற அடிப்படையில் மக்களுடைய பிர்ச்சினைக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் அண்மைக்காலமாக இனமுறுகல் ஏற்படுத்தும் வகையில் காணிப்பிரச்சினை தொடர்பாக பேசப்பட்டுவருவதாகவும் கேறளைப்பற்று மத்தி மற்றும் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகம் என்பன எல்லை நிர்ணயம் செய்யாமல் இருப்பதனால் இனமுறுகல்களுக்கு காரணம் என்பதனை மறுக்கமுடியாத உண்மை எனவும் எல்லை நிரணய ஆணைக்குழு சிபாரிசு செய்யப்பட்ட பிரரேரணை எனவும் மேற் குறிபிட்ட பிரதேச செயலகங்களுக்கான எல்லை நிர்ணயத்தினை செய்து தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இக்காணி எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் இதற்கான ஆதரவினை வழங்க வேண்டும் என இவ் விடத்தில் வேண்டிக் கொள்வதாகத் தனது கருத்தினை பதிவு செய்தார் .

கௌரவ உறுப்பினர்கள் இப்பிரேரணையினை நிறைவேற்றுவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் இல்லை என தெரிவித்ததுடன் , தற்பொழுது இப் பிரேரணையினை எடுக்கத் தேவையில்லை என தெரிவித்தனர்

கௌரவ உறுப்பினர்களின் கோரிக்கைமைக்கு அமைவாக இப் பிரேரணை தொடர்பாக முரண்பாடுகள் வருவதனால் இப்பிரேரணையினை எழுத்துலம் அடுத்துவரும் கூட்டங்களில் சமர்பிக்கவும் என தங்களது கருத்தினைப் பதிவு செய்தனர்.

**அதனைத் தொடந்து கடந்த மாதக் கூட்டக்குறிப்பினை** திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. சாமித்தம்பி மணிசேகர் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், மற்றும் கௌரவ உறுப்பினர்களான திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன், ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் , திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம்,ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பொன்னையா கலைவாணி , திரு.கந்தசாமி பகீரதன், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி, திரு. சண்முகம் கதிரவன், திரு. குணராசா குணசேகரன், திரு.கிருக்ஷ்ணபிள்ளை சேயோன், திரு. சுந்தரம் சுதர்சன், ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அகிய 19 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன், கௌரவ உறுப்பினர் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்கள் நடுநிலை வகித்ததுடன் கடந்த மாதக் கூட்டக்குறிப்பானது 20 மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதுடன் திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர், ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் அவர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

## தீர்மானங்களை நிறைவேற்றல்

## 01. தீர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/58/December/01/2022

**01. 2023ம் ஆண்டிற்கான பெறுகைக்குழு உறுப்பினர்களை நியமித்தல்.**

திறத்தல் குழு உறுப்பினர்களை நியமித்தல்.

(1) திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் ~ (கௌரவ தவிசாளர்) ~தலைவர்
(2) திரு ச.நவநீதன்~ (செயலாளர்) ~ உறுப்பினர்
(3) திரு. S.A.M நியாஸ் ~ உதவி திட்டமிடல் பணிப்பாளர்
(பிரதேச செயலகம், கோறளைப்பற்று மத்தி) உறுப்பினர்

(4) திரு.S.லோகானந்ததாசன் -வேலை நிர்மான அத்தியட்சகர்
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்)~ உறுப்பினர்

(5) திரு.M.தயாபரன் ~தொழிநுட்ப உத்தியோகத்தர் ~ உறுப்பினர்

தொழிநுட்பக்குழு உறுப்பினர்களை நியமித்தல்.

(1) திரு.S.லோகானந்ததாசன் -வேலை நிர்மான அத்தியட்சகர் ~ தலைவர்
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்)

(2) திரு.A.அமல்ராஜ் ~ தொழிநுட்ப உத்தியோகத்தர் (கோறளைப்பற்று மேற்கு, பிரதேசசபை) ~ உறுப்பினர்

(3) திரு.M.தயாபரன் ~தொழிநுட்ப உத்தியோகத்தர் ~~ உறுப்பினர்

பெறுகைக்குழு உறுப்பினர்களை நியமித்தல்.

(1) திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் ~ கௌரவ தவிசாளர் ~~ தலைவர்

(2) திரு ச.நவநீதன்~ (செயலாளர்)- ~ உறுப்பினர்

(3) திரு. S.A.M நியாஸ் ~ உதவி திட்டமிடல் பணிப்பாளர் ~ ~ உறுப்பினர்
(பிரதேச செயலகம், கோறளைப்பற்று மத்தி)

(4) திரு.S.லோகானந்ததாசன் -வேலை நிர்மான அத்தியட்சகர் ~ உறுப்பினர்
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்)

(5) திரு.M.தயாபரன் ~தொழிநுட்ப உத்தியோகத்தர் ~ உறுப்பினர்

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. சண்முகம் கதிரவன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. சாமித்தம்பி மணிசேகர் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், மற்றும் கௌரவ உறுப்பினர்களான திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன், ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் , திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பொன்னையா கலைவாணி , திரு.கந்தசாமி பகீரதன், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி , திரு. சண்முகம் கதிரவன், திரு. குணராசா குணசேகரன், திரு.கிருகூஷ்ணபிள்ளை சேயோன், ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா, திரு. சுந்தரம் சுதர்சன், ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அகிய 21 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன், நடுநிலையாக கௌர உறுப்பினர் ஜனாப்.முகம்மதுபுகாரிமுகம்மது வாசுதீன் **KPPS/M.MEETING/58/December/01/2022**

**இலக்க** தீர்மானமானது 21 மேலதிவாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதுடன் திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் அவர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

## 02. தீர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/58/DECEMBER/02/2022

- (இரண்டுவருடத்திற்கு மேற்பட்ட முத்திரை வரியை மீளளித்தல்)2018ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதங்களுக்கான முத்திரை தீர்வை ரூபாய் 527,450.00யை பெற்றுக்கொள்வதற்கான சபை அங்கீகாரம் பெறல் .

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ தவிசாளர் அவர்கள் நவம்பர் மாதம் தொடக்கம் டிசம்பர் வரை எமக்கு கிடைக்கவேண்டிய முத்திரை நிலுவை வரியினை மீளளிப்பு பெறுவதற்காக சபையின் அங்கீகாரத்தினை பெற்று பிரதி பிரதம செயலகத்திற்கு(நிதி) அனுப்பவேண்டியுள்ளதாகவும், அத்துடன் முத்திரை வரியினை பெற்றுக்கொள்வதற்காக மாவட்டசெயலகத்தில் அமைந்துள்ள காணிப்பிரிவில் இதற்கான ஆவணங்களை சரிபார்த்துப் பெற்றுக்கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டியதுடன், எனவே முத்திரை தீர்வையினை பெற்றுக்கொள்வதற்கான சபை அங்கீகாரத்தினை கௌரவ உறுப்பினர்கள் வழங்குமாறு கேட்டுக்கெண்டார்.

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. சிற்றம்பலம் கிருபாகரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/58/DECEMBER /02/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உபதவிசாளார் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 58ஆவது சபை அமர்வானது காலை 11.00 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

……….................………………….

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.

**03தீர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/58/DECEMBER/03/2022**

- 2021ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் காரணமாக எமது சபையில் குத்தகை பெற்றுக் கொண்டவர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டமையினால் 3ஆம் மாதம் தொடக்கம் 5ஆம் மாத காலப்பகுதிற்கான எமது சபைக்குச் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகையினை சலுகை அடிப்படையில் கழித்துக் கொள்ளுமாறு கடிதம் மூலம் அறிவித்துள்ளமையினால் அதற்கான விலக்கழிப்பினை மேற்கொள்வதற்கான சபை அங்கீகாரம் பெறல்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ தவிசாளர் அவர்கள் மேற்படி தீர்மனம் தொடர்பாக எமது சபையில் குத்தகை பெற்றுக் கொண்டவர்கள் குறித்தமாதத்தில் கொரோனா வைரஸ் காரணமாக கொரோனா விதிமுறை நடைமுறையில் இருந்துள்ளமையினால் அவர்களுக்கு வருமான இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக கடிதம் மூலம் அறிவித்துள்ளதுடன் அந்தக் காலப்பகுதிக்கான விலக்கழிப்பினையும் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக தெளிவுபடுத்தினர்.

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. சிற்றம்பலம் கிருபாகரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/58/DECEMBER /03/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உபதவிசாளார் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

### 04திர்மானஇல:-தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/58/DECEMBER/04/2022

- **2022 ஆண்டு நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எமது சபையில் குத்தகை பெற்றுக் கொண்டவர்களுக்கு வருமான இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளதனால் அதற்கான தொகையினை கழித்துக் கொள்வதற்கான சபை அங்கீகாரம் பெறல்**

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ தவிசாளர் அவர்கள் 2022ஆம் ஆண்டு நாடு பூராகவும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவியதாகவும் அதனால் அனைவரது தொழில் துறைகளும் பாதிக்கப்பட்டதாகவும் அதே போன்று எமது பிரதேசத்திலும் உள்ள தொழில்துறைகளும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் , இதற்கான வரி விலக்கழிப்பினை மேற்கொள்ளுமாறு எமது சபையில் குத்தகை பெற்றுக்கொண்ட வர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்துக் கொண்டார்.

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. சிற்றம்பலம் கிருபாகரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்ததனால் **KPPS/M.MEETING/58/DECEMBER /04/2022 இலக்க** தீர்மானமானது ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ உபதவிசாளார் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபைக்கு பிரசன்னமாகவில்லை.

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 58ஆவது சபை அமர்வானது காலை 10.00 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

……….................……………………

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.